# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயற்திறன் அறிக்கை

# ANNUAL PERFORMANCE REPORT

# 2018

**නගර සැලසුම් හා ජල සම්පාදන අමාත්‍යාංශය**

**நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு**

**MINISTRY OF CITY PLANNING AND WATER SUPPLY**


අංක 35 , "ලක්දිය මැදුර", නව පාර්ලිමේන්තු පාර, පැලවත්ත, බත්තරමුල්ල
இல 35,"லக்தியமெதுர",புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல
**No. 35, "LakdiyaMedura", New Parliament Road, Pelawatta, Battaramulla**

# வருடாந்த

# செயற்திறன் அறிக்கை

# 2018

## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

**இல 35 "லக்திய மெதுர" புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல**
**தொலைபேசி 011-2177240,011-2177241**
**தொலைநகல்- 011-2177242**
**மின்னஞ்சல் - secretary@mcpws.gov.lk**
**இணையதளம் –www.mcpws.gov.lk**

## இலக்கு

சிறந்த வாழ்க்கைக்கு திட்டமிடப்பட்ட நகரங்கள் பாதுகாப்பான குடிநீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகநல வசதிகளை வழங்குதல்

## பணி

உயிரியல் சுற்றாடல் மற்றும் நீர் வளம் என்பவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நிலையான நகர திட்டமிடல், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் போதுமான அளவு மேம்படுத்தப்பட்ட சுகநல வசதிகளை வழங்கல் போன்றவற்றின் மூலம் பொது மக்களின் சிறப்பான வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பொது மக்களுக்கான வசதிகளை வழங்குதல்

# கௌரவ அமைச்சரின் செய்தி



மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களினதும் தோற்றம், உயிர் வாழ்வு,பரிணாமம் நிலைத்து நிற்கும் தன்மையை தீர்மானிக்கும் முக்கிய காரணி நீராகும். எனவே இன்றைய சர்வதேச சமூகத்தாலும் மற்றும் நிறுவனங்களாலும் நீர் ஒரு அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆகையால் அனைவருக்கும் நீருக்கான சம வாய்ப்புக்களை உருவாக்கவும் பிரபஞ்சத்தின் நிலைத்தன்மையை கருத்தில் கொண்டு நீரை பாதுகாக்கவும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை உலகளாவிய சமூகத்தின் மேலே கூறப்பட்ட நோக்கத்தை தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் போதிய அளவு சுகநல பாதுகாப்பு வசதிகளை வழங்குவதற்கு பெரும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்தின் இந்த விசேட பொறுப்பை என் அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களமும் கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொன்ட முயற்சியின் காரனமாக 2015 ஆம் ஆண்டில் 86% மாக இருந்த பாதுகாப்பான குடிநீர் வழங்கல் 90.60% மாக அதிகரிக்க முடிந்துள்ளது. மேலும் 2015 ஆம் ஆண்டில் 45.09% மாக இருந்த பாதுகாப்பான குழாய் நீர் வழங்கல் 2018 ஆம் ஆண்டு இறுதிக்குள் 50.5% மாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல் மற்றும் சுகநல பாதுகாப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு விசேட முயற்சிகளுடன் பணியாற்றிய ஒரு ஆண்டாக 2018 ஆம் ஆண்டை குறிப்பிடலாம் இந்த அமைச்சுகும் மற்றும் இதன் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கும் 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவு திட்ட பத்திரத்தின் மூலம் 35 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த முழு ஒதுக்கீட்டு நிதியையும் பயன் படுத்தி அந்த ஆண்டுக்குள் நீர் வழங்கும் பாரிய கருத்திட்டங்கள் 04 பணிகளை நிறைவு செய்யவும் புதிய கருத்திட்டங்கள் 08 இன் பணிகளை ஆரம்பிக்கவும் முடிந்துள்ளதுடன் மேலும் உள்நாட்டு வங்கிகடன் நிதியின் கீழ் 5,000 மில்லியன் ரூபா அளவு நிதியை பயன்படுத்தி பாரிய அளவிலான நீர் வழங்கும் உத்தேச முறைகள் 15 செயற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அமைச்சுக்கு வழங்கபட்ட விசேட பொறுப்புக்களில் ஒன்றாக மூலகாரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோய் பரவி வரும் 11 மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதாகும். அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு குறுகிய காலத்திற்குள் பாதுகாப்பான குடிநீரை வழங்குவற்கு நீர் நீடிப்புக்கள் மற்றும் மறுவடிகட்டல் கருவிகள் முலம் நீர் வழங்குவதற்கு 500 மில்லியன் ரூபா அளவு நிதியை பயன்படுத்தியுள்ளதுடன் நீண்ட காலத்திற்க்கு நீரை வழங்கும் உத்தேச முறைகளை ஏற்படுத்துவதற்கு படிமுறைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் சீனா அரசாங்கத்தின் ஆதரவின் கீழ் பேராதெனிய பிரதேசதில் இஸ்தாபிக்கப்பட்டுள்ள சீனா இலங்கை பிரதான ஆராய்ச்சி செயற்திட்டத்தின் பணிகள் 2018 ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்க முடிந்தமை இவ்ஆண்டில் அடைந்த பெரும் வெற்றியாகும் இவை அனைதினதும் பிரதி பலனாக தற்போது சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து காணப்படுவதாக தகவல்கள் மூலம் கானப்படுகின்றது இது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அமைச்சுக்கு வழங்கபட்ட விசேட பொறுப்புக்களில் இன்னும் ஒரு முக்கிய பொறுப்பாக காணப்படுவது குறைந்த அபிவிருத்தி உள்ள நகரங்களின் உட்கட்ட அமைப்பை மேம்படுத்துவதாகும். இதற்காக 3500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை பயன் படுத்தி 427 கருத்திட்டங்கள் செயறபடுத்தப்பட்டுள்ளன

அனைத்து கருத்திட்டங்களையும் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களையும் திட்டமிட்டு நடைமுறை படுத்துவதில் எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய கௌரவ இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைவர், பொதுமுகாமையாளர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் அதிகாரிகள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும். நன்றியை தெரிவித்துக் கொண்டு என் செய்தியை முடித்துக் கொள்கின்றேன்.

**ரவூப் ஹக்கீம் (பா.உ)**
நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர

# கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி



நீர் வழங்குவதற்கு பெரும் முயற்ச்சியுடன் அதிகமான முதலீட்டை பயன்படுத்தி குடிநீர் பொது மக்களுக்கு பகிர்ந்தலளிக்க பட்டபோதிலும் அதை மிகவும் நியாயமான விலைக்கு பொதுமக்களுக்கு வழங்குவதில் ஏற்படும் சிக்கல்களுக்கு இன்று நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியன முகம் கொடுக்கும் சவால்கலாகும் இந்த சவாலை வெற்றி பெற அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்திறன், முன்னேற்ற திறன் ஆகியன இந்த சவாலை வெற்றி பெற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும் இப்பிரச்சினைகளை தீர்பதற்க்கும் தீர்வுகான்பதற்க்கும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளினதும், நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமாகும்.

நாம் வழும் புவியானது நீர் நிறைந்த கிரகமாக இருந்தாலும் பயன்படுத்த கூடிய நீரின் அளவும் மிகவும் குறைவானதே எனினும் உலகில் வேகமாக அதிகரித்து வரும் சனத்தொகை கேட்ப நீரின் நுகர்வும் அதிகரிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீட்டின்படி 2050 ஆண்டளவில் 60 க்கும் மேற்பட்ட நாடுகளில் கடுமையான நீர் பற்றாக்குறைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுவதுடன் இலங்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட இயற்கை பேரழிவுகளை பார்க்கும்போது நீரினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு களை மறக்க முடியாது எமது நாட்டின் சமீப கால அனுபவமாக இருப்பது கடுமையான வறட்சியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் கடுமையான வெள்ள பெருக்குகளையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டமை சுத்தமான குடிநீர் இல்லாத சந்தர்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பெரும் சிக்கலானவை அதற்கமைய குறிப்பிட்ட அளவு நீரை முகாமைத்துவத்துடன் குடிநீர் மற்றும் மற்றய அனைத்து நடவடிக்கைகளுக்கும் பயனபடுத்துதல் இன்று எம் முன் உள்ள நாம் சந்திக்கும் சவாலாகும்.

நிறந்தற அபிவிருத்தி இலக்குகளில் 6 வது இலக்காக அமைவது அனைவருக்கும் பகதுகாப்பான குடிநீர் மற்றும் சுகநல வசதிகளை வழங்குதலாகும் எனவே இவ் இலக்குகலை வெற்றி பெற்று இன் நாட்டின் அனைதது மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதுடன் சுகநல பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தி பொதுமக்களிடையே விழிப்புனர்வை ஏற்படுத்துவதன் மூலம் சூழலை பாதுகாப்பதோடு பருகுவதற்கு உகந்த குடிநீரை வழங்கும் பணியில் நாங்கள் ஈடுபட்டுள்ளதுடன் இப்பணியில் எங்கள் அர்ப்பணிப்பை இந்த வருடாந்த செயற்திரன் அறிக்கை ஊடாக இப்பணியில் ஆர்வம் காட்டுபவர்களுக்கு பார்க்கமுடியும்.

மேலும் சுகநல வசதிகள் தொடர்பாக கண்டறிவதற்கு குறைந்த கவனத்தை செலுத்துவது ஒரு சிக்கலான விடயமாகும் அமைச்சு மூலம் சுகநல வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுடன் அவற்றை சரியான முறையில் பராமரித்து நடைமுறைப்படுத்தி செல்வது ஒரு குழுவிற்க்கு மட்டும் இயன்ற காரியம் அல்ல. பொதுவாக பார்த்தால் சுத்தமான குடிநீர் வழங்குதல் மற்றும் சுகநல வசதிகளை மேம்படுத்தும் பொறுப்பு எமது பொறுப்பாக இருந்தபோதும் பாடசாலை, சமுதாய அமைப்புக்கள், ஊடகங்கள் மூலம் இவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அரிதான வளமாகிய நீரை சிக்கனமாக பயன்படுத்த மக்களை ஊக்குவிப்பது அனைவரதும் பொருப்பு என்பதை நினைவில் வைக்க விரும்புகிறேன்.

அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடனும் மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்துடனும் இணைந்து இப்பாரிய பொருப்பை சரியான முறையில் முகாமைத்துவம் செய்ய வேண்டியுள்ளது. அதற்காக நாடு என்ற ரீதியாகவும் ஒரு அமைச்சு என்ற ரீதியாகவும் இந்த சவாலை வெற்றி பெற என் அதிகபட்ச பங்களிப்பை வழங்குவேன்.

**லகீ ஜயவர்தன (பா.உ)**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

# அமைச்சு செயலாளரின் செய்தி



புவியின் மூன்றில் ஒரு பங்கை விட அதிகமாக நீர் மூடியிருந்தாலும் அன் நீரில் 97% உவர் நீராகும் 3% மான சிறிதலவு நீரே நன்நீராக காணப்படுகின்ரது. இதில் மனிதன் பயன் படுத்த கூடிய நீரின் அளவு உலகில் உள்ள மொத்த நீரில் 06% விட குறைந்த அளவு நீரயே காலநிலை மற்றங்கள் மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக இந்த மட்டுப்படுத்தப்பட்ட நீர் வளமும் வேகமாக குறைந்து வருகிறது. எனவே இப் பிரபஞ்சத்தில் வாலும் அனைத்து மக்களினதும் கடமை நீர் வளத்தை பாதுகாப்பது.

அதிகரத்து வரும் மக்கள் தொகைக்கு பாதுகாப்பான குடிநீர் வசதிகலை வழங்குதல், அனைவருக்கும் சுகநல பாதுகாப்பு வசதிகளை உருதிப்படுத்துதல் மற்றும் பின்தங்கிய நகரங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய வள ஒதுக்கீட்டின் முக்கிய பொறுப்புக்கள் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2030 ஆம் ஆண்டளவில் நமது நாட்டின் அனைத்து மக்களுக்காகவும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகநலபாதுகாப்பு வசதிகழ் வழங்குவதை உறுதிப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான குழாய் நீர் உள்ளடக்கம் 60% மாக உயர்த்துவதற்க்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நகர மற்றும் கிராம பகுதிகளில் கருத்திட்ட நிகழ்ச்சிகளை நடைமுறை படுத்துவதில் முக்கிய நிறுவனங்களான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் ஆகியன முக்கிய பங்கு வகின்றன. மேலும் 07 மாவட்டங்களில் உலக வங்கி நிதியில் இயங்கும் நீர் வழங்கல் மற்றும் சுகநல பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் (WASSIP) இத்திட்டத்தின் மூலம் மேல் குறிப்பிடப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான ஒத்துழைப்பு இதன் மூலமும் வழங்கப்படுகின்றன.

நாட்டு மக்கள் தொகையில் 90.6% பாதுகாப்பான குடிநீருக்கான அனுகள் உள்ளதுடன் பாதுகாப்பான குழாய் நீர் உள்ளடக்கம் 50.5% மாகும் இதுவரையும் வழங்கப்பட்டுள்ள முழு குழாய் நீர் இணைப்புகளின் எண்ணிக்கை 2.32 மில்லியன் அளவாகுவதுடன் இவ் ஆண்டுக்குள் மாத்திரம் குழாய் நீர் இணைப்புக்கள் 109,462 வழங்கப்பட்டுள்ளதுடன் 2015 தொடக்கம் 2018 ஆம் ஆண்டுவறையான காலத்துக்குள் பாரிய நீர் வழங்கல் மற்றும் மலக்கழிவகற்றும் கருத்திட்டங்கள் 18 இன் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் நீர் வழங்கும் புதிய கருதிட்டங்கள் 07 இன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாரிய கருத்திட்டங்களை நடைமுறை படுத்துவதுடன் மூலகாரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோய் பரவுவதை தடுக்கும் நோக்கத்துடன் விசேட நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுத்துவதுடன் மழைநீர் சேகரிப்பு திட்டங்கள், WASH போன்ற செயற்திட்டங்களும் அமைச்சின் மூலம் நடைமுறை படுத்தப்படுகின்றன. மேலும் நீரின் தரத்தை பரிசோதிப்பதற்க்கும், மூலகாரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோய்க்குறிய காரணங்களை கண்டறியவும், உலர் வலய பிதேசங்களிள் மழைநீரை சேகரித்தல் மற்றும் பயன்படுத்தும் முறைகள் தொடர்பாகவும் மற்றும் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்யவும் சீன இலங்கை பிரதான ஆராய்ச்சி செயற்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கருத்திட்ட நிகழ்ச்சிகளை குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்கும் குறிக்கோலுடன் மிகவும் திறமையகன முறைகளை பின்பற்றி நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்வேன்.

**எம்.எம்.பீ.கே.மாயாதுன்னே**
செயலாளர்
நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு

# இராஜாங்க அமைச்சு செயளாலரின் செய்தி



அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் போதிய சுகநல பாதுகாப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களின் சிறுநகரங்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்தல் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் முதன்மை பொறுப்புகளாகும்.

2018 ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட பல சவால்களுக்கு மத்தியில் மக்கள் தொகையில் 50.5 வீதத்தினருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்வும், 2.06 வீதத்தினருக்கு குழாய்கள் வழியாக மல கழிவகற்றும் வசதிகளை வழங்கவும் மற்றும் பின்தங்கிய சிறுநகரங்களை அபிவிருத்தி செய்வதற்க்கு 3,500 மி.ரூபா அளவு நிதியை பயன் படுத்தி அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள முடிந்துள்ளது.

இந்த சவால்களை வெற்றி பெறும் பாரிய பொருப்புக்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையும், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தினதும் மற்றும் இந்த அமைச்சின் கீழ் இயங்கும் கருத்திட்டங்களினதும் ஒத்துழைப்பு கரணமாக இப்பணிகளை வெற்றிகரமாக நிறை வேற்றிக்கொள்ள முடிந்துள்ளது.

மேலும், வரலாற்றில் மழைநீர் சேகரிக்கும் ஒரு வளமான கலாச் சாரத்திற்க்கு உருமையுள்ள ஒரு நாடாகும் எமது நாடு இந்த தேசிய அறிவை பயன்படுத்தி மழைநீரை சேகரித்து பயன் படுத்த விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த அமைச்சுக்கு கீழ் இயங்கும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் கிராமிய மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்க 200 மில்லியன் ரூபா நிதியை பயன்படுத்தி கருத்திட்ட நிகழ்ச்சிகல் பல நடைமுறைப்படுத்தியுள்ளது.

நீர் எமது உயிருக்கு நிகர் அதை பாதுகாப்பது எம் அனைவரினதும் பொறுப்பு.

**ஜே .எம். மங்கலதிஸ்ச**
செயலாளர்
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு

# உள்ளடக்கம்

**முதலாவது அத்தியாயம்** ........................................................ 1

1.1 அறிமுகம் ........................................................ 2

1.2 கருமங்கள் ........................................................ 3

1.3 அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ........................................................ 3

1.4 இலங்கையின் குடிநீர் வழங்கல் மற்றும் சுக நல வசதிகளின் உள்ளடக்கம் ........................................................ 4

1.5 நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கள் அமைச்சின் – 2018.12.31 திகதிக்கு அங்கிகரிக்கப்பட்ட ஆளணி 7

1.6 2015-2018 ஆண்டுக்குள் அடைந்து கொள்ளப்பட்ட செயற்திறன் ........................................................ 8

1.7. 2015 – 2018 வரை வழங்கப்பட்ட நீர் இணைப்புக்கள் தொகை ........................................................ 9

(மாகாண, மாவட்ட ரீதியியாக) ........................................................ 9

**இரண்டாவது அத்தியாயம்** ........................................................ **10**

2.1 2018 ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் 2018.12.31 திகதிக்கான மொத்த முன்னேற்றம் ........................................................ 11

2.2 அமைச்சினால் நேரடியாக அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்திட்டங்கள் ........................................................ 12

2.3 தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய பணிகள் ........................................................ 21

2.4 தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்திய கருதிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்கள் ........................................................ 27

# முதலாவது அத்தியாயம்

## 1.1 அறிமுகம்

வளி, நீர், உணவு ஆடை அணிகலன்கள் மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளாகும். வளி மனிதனின் அடிப்படைத் தேவையாக இருந்தபோதிலும் தூய்மையான வளி மிகவும் வரையறுக்க பட்ட சுற்றாடல் தவிர்ந்த ஏனைய இடங்களில் இன்னும் இயல்பாகப் பெறக்கூடிய இயலுமையுள்ளது. கடந்தகாலங்களில் தூய்மையான நீரை இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்த போதிலும் சனத்தொகை அதிகரிப்பு, கைத் தொழில்களின் அதிகரிப்பு போன்ற வற்றால் இயற்கைச் சூழல் அழிவடைதல் மற்றும் காலநிலை மாற்றங்கள் உள்ளிட்ட பல காரணங்களால் தூய்மையான குடிநீரை பெற்றுக் கொள்வது இன்று சிரமமான விடயமாக மாறியுள்ளது. நீரானது உயிரொன்றின் பிறப்பிலும் இருப்பிலும் கைத்தொழில் அபிவிருத்தியிலும் முதன்மையான தீர்மானிக்கும் காரணியென்பதனால் அனைத்து அரசாங்கங்களுக்கும் தமது நாட்டு மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான நீரை வழங்கவேண்டிய பொறுப்புள்ளது.

அனைத்து நாடுகளிலுமுள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதன் முக்கியத்துவம் காரணமாகவே இது தொடர்பில் சர்வதேச ரீதியிலும் கவனம் செலுத்தப்பட்டதன் பெறுபேறாக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் மிலேனியம் அபிவிருத்தி இலக்கு உருவாக்கப்படும்போது இலக்குக் குறிக்கோள் இல. 07 இல் 1990 ஆண்டில் 64% ஆக இருந்த பாதுகாப்பான குடிநீர் வழங்களை 2018 ஆம் ஆண்டு இறுதியில் 90.60% வரை அதிகரிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன், அதனை அடைய முடிந்துள்ளது.

மிலேனியம் அபிவிருத்தி இலக்கை இற்றைப்படுத்தி நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை உருவாக்கும் போது பாதுகாப்பான குடிநீர் வழங்கலின் முக்கியத்துவம் காரணமாக 2030 ஆம் ஆண்டளவில் நீரின் தரத்தை மேம்படுத்துதலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான குடிநீர் சுகாதாரம் தொடர்பாக சர்வதேச ரீதியில் இலங்கை எட்டியுள்ள உடன்பாடுகள் மற்றும் தமது நாட்டு மக்களுக்கு குடிநீரை வழங்கும் பொறுப்பும் விசேடமாக குடிநீர் சார்ந்ததாக நாட்டின் சில பிரதேசங்களில் மக்கள் முகங்கொடுத்துள்ள சீறுநீரக நோய் நிலையும் காரணமாக இலங்கை அரசும் பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தொடர்பில் சிறப்பான கவனத்தைச் செலுத்தியுள்ளது.

பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தொடர்பிலான அரசின் இந்த முன்னுரிமையான, சிறப்பான குறிக்கோளை அடைவதற்காக கொள்கை வகுத்தல், அமுல்படுத்துதல், மதிப்பீடு செய்தல் செயற்பாடுகளுக்காக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமுகமாக தனியான அமைச்சொன்று அனைத்து அரசுகளாலும் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2015 ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு எனும் பெயருரைய அமைச்சு 1897/15 இலக்க 2015.01.18 திகதிய வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் கீழ் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமதாய நீர் வழங்கல் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி மீட்பு கூட்டுத்தாபனம் ஆகிய திணைக்களங்களும் நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன.

2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலின் பின்னர் அமைச்சின் விடய தானம் மீலாய்வின் பின்னர் அதற்கமைய 1933/13 இலக்க 2015 செப்டெம்பர் 21 திகதி வர்த்தமானி மூலம் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு பிரகடனப் படுத்தப்பட்டதுடன் இந்த அமைச்சின் கீழ் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களமும் உள்ளடங்குகின்றன.

அதன் பிறகு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதி நடைபெற்ற திருத்ததின் மூலம் வெளியிடப்பட்ட 2103/33 ஆம் இலக் விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது. அதன் கீழ் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களமும் அடங்கும் விடய தானம் திருத்தம் செய்ய பட்டாமும் குாடிநீர் மற்றும் சுகநல வசதிகளை வழங்கும் பொறுப்பு இவ் அமைச்சுக்கு தொடர்ந்து உள்ளது.

## 1.2 கருமங்கள்

- நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்ங்களை உருவாக்குதல் மற்றும் உரிய திணைக்களங்கள், நியதிச் சபைகளின் விடயப்பரப்புக்களுடன் தொடர்புடைய விடயங்களின் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு.

- விசேட நகரத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி விடயங்கள்.

- நகர அபிவிருத்தி செயற்பாடுகளின்போது தேசிய பௌதீக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து நிர்மாண நடவடிக்கைகளையும் நெறிப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

- அனைத்து குடிமக்களுக்கும் தூய குடிநீரை வழங்குதலை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- நீர் வழங்கல் சேவைகள், மலக்கழிவகற்றல் முறைமை மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பில் பரிசோதித்தல், திட்டமிடுதல், திட்டத்தைத் தயாரித்தல், நிர்மாணங்களை நெறிப்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

- சமூக நீர் வழங்கல் மற்றும் சுகாதாரக் கருத்திட்டங்களை வினைத்திறனாகவும், முறைப்படியும் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கைகளை எடுத்தல்.

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

## 1.3 அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

2018 ஆம் ஆண்டு 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2103/33 ஆம் இலக் விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டதுடன் அதன் கீழ் பின்வறும் நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளது.

- தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
- தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம்
- சுகநலம் தொடர்பான பிரதேச மத்திய நிலையம் (SACOSAN)
- நீர் வழங்கல் மற்றும் சுகநல வசதிகளை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம் (WaSSIP)
- சீனா இலங்கை பிரதான ஆராய்ச்சி செயற்திட்டம்

## 1.4 இலங்கையின் குடிநீர் வழங்கல் மற்றும் சுக நல வசதிகளின் உள்ளடக்கம்

### 1.4.1 நீர் ஆதாரங்களின் படி பாதுகாப்பான குடிநீர் வழங்கல் உள்ளடக்கம் – 2018




**வரைபு இல - 01**
**மூலம் :** தே.நீ.ம.வ.ச

### 1.4.2 ஆதாரங்களின் படி இலங்கையில் சுகநல வசதிகள் - 2018




**வரைபு இல - 02**
**மூலம் :** தே.நீ.ம.வ.ச

*குழாய் மலக் கழிவகற்றல் வீதம் 2.07ஆகும் 2018 இல் அது 2.06% குறைந்துள்ளது இதற்கு காரணம் மக்கள் தொகை அதிகரிப்புடன் குழாய் மலக் கழிவகற்றல் வீதம் குறைந்துள்ளது.

### 1.4.3 பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகநலப்பாதுகாப்பு தொடர்பான வசதிகளை மேம்படுத்துவதற்கான உபாயங்கள்

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் பாதகாப்பான குடிநீர் மற்றும் சுகநல பாதுகாப்பு வசதிகளை வழங்குவது அரசின் முதன்மைக் கொள்கையாகும். அதற்காக பின்வரும் உபாயங்கள் பின்பற்றப்படுகின்றன.

### 1.4.4 பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தொடர்பான உபாயங்கள்

- அதிகரித்துவரும் வீடு மற்றும் வீடு சாராத கேள்வியைக் கருத்தில் கொண்டு குழாய் நீர் வழங்கலை அதிகரித்தல்.
- பாதுகாப்பான குடிநீர் பெற்றுக் கொள்ளும் போது பிரதேச ரீதியா நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.
- பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட காரணிகள் மற்றும் ஆகுசெலவு போன்றவற்றைக் கருத்திலெடுத்து புதிய உத்தேச நீர் வினியோகத் திட்டங்களை திட்டமிடுதல்.
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் பரவியுள்ள பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல்.
- நீர்மூலங்கள்/உள்ளுளிப்பு நீர்வழிகள்/சமூக மட்ட அமைப்புக்களால் முகாமைத்துவம் செய்யப்படும் திட்டங்களின் நீரின் தன்மை மற்றும் அளவைக் கூட்டுதல்.
- நீர்க் கருவிகள்/ஏனையஉதிரிப்பாகங்களுக்கு தராதரத்ங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் குழாய் நீர் வழங்கல் முறைமைகளை மேம்படுத்தல்.
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய்க்கான அடிப்படைக் காரணத்தை இனங்காண்பதற்காகவும் அந்த நோயைத் தவிர்ப்பதற்காகவும் நிலக்கீழ் நீரைத் தூய்மையாக்குவதற்காக மிகவும் சாத்தியம் மிக்க தூய்மையாக்கல் முறைமையை அறிமுகம் செய்வதற்காக தரமுயர்ந்த மற்றும் நவீன ஆராய்ச்சிகள் / ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- கைத்தொழில் துறைக்கு 24 மணித்தியாலமும் நிலையான குழாய் நீர் பெறுதலுக்காக அதிகரித்துவரும் கேள்வியை நிறைவுசெய்தல்.
- குழாய் நீர் வழங்கல் சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் கொள்லளவை அதிகரித்தல்.
- மக்கள் நேயமிக்க இலாபமீட்டும் நிறுவனமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினை இயக்குவதற்கான வழிகாட்டல் வழங்கல்.

### 1.4.5 பாதுகாப்பான குடிநீர் தொடர்பான இலக்குகள்

- 2020 ஆண்டளவில் அனைத்து இலங்கையருக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்குதல்.
- 2020 ஆண்டளவில் குழாய் நீர் வழங்கல் கொள்லளவை 55% வரை அதிகரித்தல்.
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் பரவியுள்ள பிரதேசங்களுக்கு குழாய் நீர் வசதிகளை வழங்குதல்.
- நீரின் தரத்தை 100% உறுதி செய்தல்.
- நீரின் தரத்தை 100% உறுதி செய்தல்.
- குடிநீர் வசதிகளை வழங்கும் நிறுவனக் கட்டமைப்பை வினைத்திறனாக்குதல்.

### 1.4.6 சுகநல பாதுகாப்பு தொடர்பான உபாயங்கள்

- விசேடமாக கிராமிய மற்றும் தோட்டத்துறையும் அடங்கலாக பாதுகாப்பு வசதிப் பயன்பாட்டை உயர்த்துதல்.
- சுகநல பாதுகாப்பு மற்றும் சுகதாரம் தொடர்பிலான கல்வி அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தல்.
- பிரதான நகரங்களின் மலக் கழிவகற்றல் வசதிகலை உயர்த்துதல்.
- நாட்டில் கழிவுநீர் அகற்றும் சேவைகளுக்கு உதவுவதற்காக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயற்பாடுகளை மேலும் திறம்பட மீளமைத்தல்.

### 1.4.7 சுக நல பாதுகாப்பு தொடர்பான இலக்குகள்

- நாடு பூராவும் 100% ஆரோக்கியமான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை உறுதிப்படுத்தல்.
- 2020 ஆகும்போது நகர்ப்புற சனத்தொகையின் 2.25% த்தினருக்கு குழாய் மூலமான மலக்கழிவு அகற்றும் வசதிகளை வழங்குதல்.

## 1.5 நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கள் அமைச்சின் – 2018.12.31 திகதிக்கு அங்கிகரிக்கப்பட்ட ஆளணி

| இல | பதவி | சேவை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | இருக்கும் தொகை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | | 01 | 01 | இல்லை |
| 2 | மேலதிக செயலாளர் | இ.நி.சே (விசேட | 01 | 01 | இல்லை |
| 3 | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே (விசேட) | 01 | 01 | இல்லை |
| 4 | மேலதிக செயலாளர் (தொழிநுட்பம்) | பொ.சே (விசேட) | 01 | 01 | இல்லை |
| 5 | சிரேஸ்ட நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் | இ.தி.சே (விசேட) | 01 | 01 | இல்லை |
| 6 | சிரேஸ்ட உதவி செயலாளர் (நிர்வாகம்) | இ.நி.சே I | 01 | 01 | 01 |
| 7 | பணிப்பாளர் (காணி) | இ.நி.சே I | 01 | 0 | இல்லை |
| 8 | பணிப்பாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே I | 01 | 01 | இல்லை |
| 9 | பணிப்பாளர் (பெறுகை) | இ.பொ.சே I | 01 | 01 | இல்லை |
| 10 | பணிப்பாளர் (விசேட புலனாய்வு) | இ.நி.சே I | 01 | 0 | 01 |
| 11 | பணிப்பாளர் (திட்டமிடல், கண்கானிப்பு) | இ.தி.சே I | 01 | 01 | இல்லை |
| 12 | பிரதான கணக்காளர் | இ.க.சே I | 01 | 01 | இல்லை |
| 13 | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே I | 01 | 01 | இல்லை |
| 14 | கணக்காளர் | இ.க.சே III/II | 01 | 01 | 01 |
| 15 | பிரதி /உதவிப் பணிப்பாளர்(அபிவிருத்தி) | இ.நி.சே III/II | 01 | 0 | 01 |
| 16 | பிரதி /உதவிப் பணிப்பாளர்(காணி) | இ.நி.சே III/II | 02 | 0 | 01 |
| 17 | பிரதி /உதவிப் பணிப்பாளர்(அபிவிருத்தி) | இ.நி.சே III/II | 02 | 02 | இல்லை |
| 18 | பிரதி /உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல், கண்கானிப்பு) | இ.தி.சே III/II | 02 | 02 | இல்லை |
| 19 | பிரதி /உதவிப் பணிப்பாளர்(விசேட புலனாய்வு ) | இ.நி.சே III/II | 01 | 01 | இல்லை |
| 20 | பிரதி /உதவிப் பணிப்பாளர் (பெறுகை) | இ.பொ.சே III/II | 01 | 01 | இல்லை |
| 21 | பிரதி /உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே III/II (மிகைஆளணி) | 02 | 02 | இல்லை |
| 22 | சட்ட அதிகாரி | இ.நி.சே III/II | 01 | 0 | 01 |
| 23 | உதவி செயலாளர் | இ.நி.சே III | 01 | 01 | இல்லை |
| 24 | நிர்வாக அலுவலர் | பொ.மு.உ.சே (அதிசிறப்பு) | 02 | 01 | 01 |
| 25 | மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) | மொழி பெயர்ப்பாளர் சேவை | 03 | 01 | 02 |
| 26 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | தற்காலிகம | 01 | 01 | இல்லை |
| 27 | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | பொ.மு.உ.சே I/II/III | 32 | 28 | 04 |
| 28 | அபிவிருத்தி உதவியாளர் | அ.உ.சே | 45 | 28 | 17 |
| 29 | தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | இ.த.தொ.சே | 02 | 01 | 01 |
| 30 | சாரதி | சாரதி சேவை I/II/III | 16 | 10 | 06 |
| 31 | அலுவலக பணியாளர் சேவை I/II/III | அ.ப.சேவை | 21 | 17 | 04 |
| 32 | தொழிநுட்ப உதவியாளர் | திணைக்களத்துக்குரிய | 01 | 0 | 01 |
| 33 | ஒளிப்படப்பிடிப்பாளர் (காணொளி) | தற்காலிகம் | 01 | 0 | 01 |
| 34 | ஒளிப்படப்பிடிப்பாளர் | தற்காலிகம் | 01 | 0 | 01 |
| 35 | ஒளிப்படப்பிடிப்பாளர் (உதவியாளர்) | தற்காலிகம் | 01 | 01 | இல்லை |
| 36 | பட்டதாரி உதவி அலுவலகர் | பட்டதாரி பயிற்சி | 0 | 07 | 01 |
| **இராஜாங்க அமைச்சர் அலுவலகம்** | | | | | |
| **37** | இராஜாங்க அமைச்சு செயலாளர் | | 01 | 0 | 0 |
| **38** | பொது முகாமைத்துவ உதவியாளர் | பொ.மு.உ.சே I/II/III | 01 | 0 | 01 |
| **39** | சாரதி I/II/III | | 01 | 01 | இல்லை |
| **40** | அலுவலக பணியாளர் சேவை I/II/III | அ.ப.சேவை | 01 | 0 | 01 |
| | **மொத்தம்** | | **156** | **116** | **47** |

*வுரவ செலவு, கணக்குகள், மனித வள, அபிவிருத்தி, பெருகை, தகவல் தொழில்நுட்பம், கணக்காய்வு உதவியாளர் பதவிகளில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

## 1.6 2015-2018 ஆண்டுக்குள் அடைந்து கொள்ளப்பட்ட செயற்திறன்

| | சுட்டிகள் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| சுகாதார பாதுகாப்பு துறைக்காக | | | | | |
| 1. | சுகநல பாதுகாப்பு வசதிகள் வீதம் | 86% | 87.43% | 87.48% | 87.40% |
| 2. | குழாய் மூலம் மலக்கழிவகற்றல் வசதிகள் வீதம் | 2% | 2.08% | 1.99% | 2.06% |
| குடிநீர் வசதிகள் துறைக்காக | | | | | |
| 3. | பாதுகாப்பான குடிநீர் வசதிகள் வீதம் | 86% | 87.8% | 89.3% | 90.60% |
| 4. | குழாய் நீர் உள்ளடக்க வீதம் | 45.9% | 47.7% | 49.2% | 50.50% |
| 5. | குழாய் நீர் வழங்கல் வீதம் (தே.நீ.வ.வ.சபையின்) | 35.2% | 37.1% | 38.7% | 40.00% |
| 6. | நாடுமுலுவதும் வருமானமீட்டாத நீர் வழங்கல் வீதம் | 27.83% | 26.26% | 25.98% | 24.90% |
| 7. | கொழும்பு நகரில் வருமானமீட்டாத நீர் வழங்கள் வீதம் | 46.16% | 45.72% | 43.14% | 41.65% |
| 8. | முழுக் குழாய் நீர் இனைப்புக்கள் (தே.நீ.வ.வ சபையாழ் வழங்கிய) | மில்லியன் 1.95 | மில்லியன் 2.09 | மில்லியன் 2.23 | மில்லியன் 2.33 |
| 9. | ஆண்டில் வழங்கப்பட்ட புதிய குழாய்நீர் இணைப்புக்கள் (தே.நீ.வ.வ.சபையால வழங்கிய) | 121,723 | 138,750 | 126,701 | 109,462 |
| நிறுவன திறன் சுட்டிகள் | | | | | |
| 10. | குழாய் நீர் இணைப்புக்கள் 1000 க்கு உள்ள உழியர்கள் எண்ணிக்கை | 5.5 | 4.95 | 4.72 | 4.31 |

மூலம் - (தே.நீ.வ.வ.சபை மற்றும் அமச்சு அறிக்கைகள்)

**1.7. 2015 – 2018 வரை வழங்கப்பட்ட நீர் இணைப்புக்கள் தொகை (மாகாண, மாவட்ட ரீதியியாக)**

| மாகண / பிரதேச உதவிச் சேவை நிலையம் | வலயம் | 2015 டிசம்பர் அளவில் வழங்கப்பட்ட மொத்த குழாய்நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை | 2016 டிசம்பர் அளவில் வழங்கப்பட்ட மொத்த குழாய்நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை | 2017 டிசம்பர் அளவில் வழங்கப்பட்ட மொத்த குழாய்நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை | 2018 டிசம்பர் அளவில் வழங்கப்பட்ட மொத்த குழாய்நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| மேற்கு – மத்தி | முன்னுரிமை | 2,290 | 2,293 | - | - |
| | கொழும்பு நகா | 138,100 | 140,841 | 144,890 | 146,592 |
| | கோட்டே TEC வடக்கு | 154,809 | 160,781 | 166,770 | 171,910 |
| | மகரகம (TEC South) | 126,120 | 140,083 | 150,630 | 159,956 |
| மேற்கு வடக்கு | களணி (TNC) | 169,717 | 183,519 | 194,207 | 203,622 |
| | கம்பஹா | 67,544 | 72,984 | 77,528 | 80,184 |
| மேற்கு- தெற்கு | தேகிவளை(TSC) | 102,479 | 105,136 | 107,363 | 109,330 |
| | களுத்துறை | 60,345 | 63,912 | 67,570 | 70,113 |
| | பாணதுறை | 56,975 | 67,687 | 77,970 | 85,089 |
| மத்திய | கண்டி | 236,052 | 248,735 | 261,356 | 272,690 |
| வடமேல் | குருணாகல் | 69,182 | 73,782 | 78,036 | 82,950 |
| வடமத்தி | அனுராதபுரம் | 100,668 | 107,686 | 114,351 | 121,609 |
| சப்ரகமுவ | கேகாலை | 51,565 | 53,468 | 55,387 | 57,200 |
| | இரத்தினபுரி | 43,219 | 47,489 | 51,219 | 55,102 |
| தெற்கு | ஹம்பாந் தோட்டை | 97,728 | 102,406 | 106,237 | 109,804 |
| | மாத்தறை | 91,709 | 94,646 | 97,267 | 99,443 |
| | காலி | 103,780 | 106,371 | 108,520 | 111,276 |
| ஊவா | பண்டாரவ ளை | 46,213 | 48,706 | 53,409 | 59,265 |
| | மொனராகல | 35,094 | 37,567 | 41,385 | 43,987 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 14,834 | 17,817 | 21,653 | 24,015 |
| கிழக்கு | அம்பாறை | 38,891 | 50,967 | 58,005 | 62,609 |
| | மட்டக்களப்பு | 34,759 | 40,748 | 46,948 | 50,780 |
| | திருகோணமலை | 47,756 | 55,902 | 63,866 | 72,829 |
| | அக்கரைப்பற்று | 63,892 | 68,935 | 74,605 | 78,279 |
| **மொத்தம்** | | **1,953,721** | **2,092,471** | **2,219,172** | **2,328,634** |

# இரண்டாவது அத்தியாயம்

## 2.1 2018 ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் 2018.12.31 திகதிக்கான மொத்த முன்னேற்றம்

| | கருதிட்டம் | ஒதுக்கிடு (மி.ரூபா) | 2018.12.31திகதிக்கன நிதி முன்னேற்றம் | | கையிருப்பு பில்கள் | நிதி முன்னேற்றம் 2018.12.31 திகதிக்கு கையிருப்பு (பில்களுடன்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மி.ரூபா | % | மி.ரூபா | மி.ரூபா | % |
| **நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு** | | | | | | | |
| 1 | மூலகாரணம் அறியப்படாத சிறுநீரக நோய் பரவும் பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீர்வ வவழங்குதல் குடிநீர் வழங்குதல் | 585 | 492.56 | 84.20 | 60.67 | 553.23 | 94.57 |
| 2 | கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகநலப் பாதுகாப்பு செயற்திட்டங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 130 | 82.46 | 63.43 | 34.99 | 117.45 | 90.35 |
| 3 | சுகாதார பாதுகாப்பு தொடர்பான தெற்காசிய மாநாட்டின் மீழாய்வு –அகில இலங்கை சுகாதார நிகழ்ச்சி திட்டம் | 20 | 19.67 | 98.39 | | 19.67 | 98.39 |
| 4 | சுகநலப் பாதுகாப்பு தொடர்பான தெற்காசிய மாநாட்டிற்கான ஒரு பிராந்திய செயலகத்தை நிறுவுதல் | 13 | 7.27 | 55.92 | | 7.27 | 55.92 |
| 5 | மழைநீர் சேகரிப்பு நிகழ்சித்திட்டம் | 5 | 0.67 | 13.40 | 2.11 | 2.78 | 5.56 |
| 6 | நீரேந்து பகுதிகளை பாதுகாப்பதும் மற்றும் நீராதாரங்கள் மாசடைவதைத் தடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 5 | 4.10 | 82.00 | 0.90 | 5.00 | 100 |
| 7 | கேகாலை மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களுக்கான குடிநீர் வசதிகளை வழங்குதல் | 112 | 90.35 | 80.67 | 20.13 | 110.48 | 98.64 |
| 8 | நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிகழ்சிதிட்டங்கள் | 3,500 | 1,773.86 | 50.68 | 444.25 | 2,218.11 | 63.37 |
| **A** | **உப மொத்தம் (1+2+3+4+5+6+7+8)** | **4,370** | **2,470.94** | **56.54** | **563.05** | **3,033.99** | **69.43** |
| 09 | நீர் வழங்கல் மற்றும் சுகநலப் பாதுகாப்பை மேம்படுத்தல் தொடர்பான செயற்திட்டம் (உலக வங்கி) (WASSIP) | 4,767 | 4,691.4 | 98.41 | 75.6 | 4,767 | 100 |
| 10 | சீனா-இலங்கை ஆராய்ச்சி செயற்திட்டம் | 325 | 247.42 | 76.13 | 0.59 | 248.01 | 76.31 |
| **B** | **அமைச்சின் கூட்டுத்தொகை (A+09+10)** | **9,462** | **7,409.76** | **78.31** | **639.24** | **8,049.00** | **85.07** |
| **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை** | | | | | | | |
| 11 | அந்தரகஸ்யாய நீர் வழங்கள் உத்தேச முறை | 20 | 4.56 | 22.80 | 1.77 | 6.33 | 31.65 |
| 12 | மாத்தறை குருகிய கால மேம்பாட்டு திட்டம் | 75 | 57.54 | 76.72 | 7.11 | 64.65 | 86.2 |
| 13 | உலர் வலய நகரப்புர நீர் வழங்கல் மற்றும் சுகநல பாதுகாப்பு கருத்திட்டம் -V ( ஆசிய அபிவிருத்தி வங்கி) (ADB v) | 50 | 49.9 | 99.80 | | 49.9 | 99.80 |
| 14 | கொழும்பு பிரதேச வீட்டுக் கழிவுநீர் இணைப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் சுகநல பாதுகாப்புக்கான வாய்ப்புக்களை மக்களுக்கு அதிகரித்தல் ( உலக வங்கி) | 315.15 | 315.10 | 99.98 | | 315.10 | 99.98 |
| 15 | பண்டாரவெல நீர் வழங்கள் உத்தேசயை முறை | 70 | 31.39 | 44.84 | 38.61 | 70 | 100 |
| 16 | திஸ்ஸமாராம நீர் வழங்கள் உத்தேச முறை | 20 | 8.3 | 41.50 | 1.45 | 9.75 | 48.75 |
| 17 | பெரிய அளவிலான நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டங்கள். (Disbursement of Ongoing Projects) | 24,182.7 | 23,982.40 | 99.17 | | 23,982.4 | 99.17 |
| 18 | திருகோணமலை நீர் வழங்கள் உத்தேச முறையை புனரமைத்தல் | 155 | 132.05 | 85.19 | 22.95 | 155 | 100 |
| 19 | காணி கையகப்படுத்தல் | 200 | 162.65 | 81.33 | | 162.65 | 81.33 |
| 20 | விரைவுபடுத்தப்பட்ட பிரதேச சபை வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் காரணமாக பயன்பாட்டு சேவைகள் ∴ இடங்களை மாற்றல் | 250 | 168.92 | 67.57 | 81.08 | 250 | 100 |
| **C** | **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கூட்டுத்தொகை** | **25,337.85** | **24,912.81** | **98.32** | **152.97** | **25,065.78** | **98.93** |
| தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் | | | | | | | |
| 21 | சமுதாய நீர் வழங்கல் முரைகலை மேம்படுத்தல் | 200 | 56.77 | 28.39 | 100.44 | 157.21 | 78.60 |
| | **முழு மொத்தம் (B+C+21)** | **34,999.85** | **32,379.34** | **92.51** | **892.65** | **33,271.99** | **95.06** |

## 2.2 அமைச்சினால் நேரடியாக அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்திட்டங்கள்

### 2.2.1 நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோய் தடுப்பு திட்டம்

| கருத்திட்டத்தின் அபிவிருத்தி குறிக்கோள் | பாதுகாப்பான குடிநீர் வழங்குவதன் மூலம் சிறுநீரக செயலிழப்பு நோயை கட்டுப்படுத்தல் | | | | |
|---|---|---|---|---|---|
| 2018 ஆண்டுக்கான ஒதுக்கீடு | முன்- மி.ரூபா 800 | | திருத்தப்பட்ட- மி.ரூபா 585 | | |
| கருத்திட்டக் காலம் | 2018.01.01 – 2018.12.31 | | | | |
| பயனாளிகள் தொகை | குடும்பங்கள் 22,492, பாடசாலை மாணவர்கள் 19,121 | | | | |
| சேவை வழங்கப்படும் பிரதேசங்கள் | வடக்கு, வட மத்திய ,வட மேல், கிழக்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, தெற்க்கு | | | | |
| 2018.12.31 திகதிக்கு நிதி முன்னேற்றம் (மி.ரூபா) | இலக்கு | அடைவுகள் | 2018.12.31 திகதிக்கு பௌதீகமுன்னேற்ம் | இலக்கு | அடைவுகள் |
| | 585 | 492.56 | | 100% | 80% |

### 2.2.2 கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகநல பாதுகாப்பை மேம்படுத்தும் செயற்திட்டம்

| கருத்திட்டத்தின் அபிவிருத்தி குறிக்கோள் | கிராமப்புர மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும் அவர்களின் சுகநல மேம்பாட்டை மேம்படுத்தவும் | | | | |
|---|---|---|---|---|---|
| 2018 ஆண்டுக்கான ஒதுக்கீடு | முன்- மி.ரூபா 200 | | திருத்தப்பட்ட- மி.ரூபா 130 | | |
| கருத்திட்டக் காலம் | 2018.01.01 – 2018.12.31 | | | | |
| பயனாளிகள் தொகை | 48,500 | | | | |
| சேவை வழங்கப்படும் பிரதேசங்கள் | வடக்கு, வட ஊ , வடமேல், கிழக்கு, மத்திய, சப்பிரகமுவ, ஊவா | | | | |
| 2018.12.31 திகதிக்கு நிதி முன்னேற்றம் (மி.ரூபா) | இலக்கு | அடைவுகள் | 2018.12.31 திகதிக்கு பௌதீகமுன்னேற்ம் | இலக்கு | அடைவுகள் |
| | 130 | 82.46 | | 100% | 60% |

### 2.2.3 மழைநீர் சேகரிப்பு தாங்கிகளை நிறுவும் நிகழ்ச்சித்திட்டம்

| கருத்திட்டத்தின் அபிவிருத்தி குறிக்கோள் | மழைநீரை சேகரித்து துயிமையான குடிநீரை வழங்குதல் | | | | |
|---|---|---|---|---|---|
| 2018 ஆண்டுக்கான ஒதுக்கீடு | முன்- மி.ரூபா 5 | | திருத்தப்பட்ட- மி.ரூபா 5 | | |
| கருத்திட்டக் காலம் | 2018.01.01 – 2018.12.31 | | | | |
